**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.372/2025**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு.உலகநாதன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு.பெரிய கருப்பன்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **56** |
| | | | **Dated** | : | **15.07.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜர். 2-ம் எதிரி ஆஜரில்லை. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். 2-ம் எதிரிக்கு பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் சாட்சிகள் பிறழ் சாட்சிகள் ஆகிவிட்டதாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் திரு.முருகன் பணிமாறுதலாகி வேறு மாவட்டத்திற்கு சென்றுவிட்டதாலும், மேற்படி ஆய்வாளர் திரு.முருகனின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம்

என்பதாலும், வழக்கின் வீண் காலதாமத்தைக் கருத்தில் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க மனு செய்து, இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 01.11.2016ம் தேதி இரவு 7.00 மணியளவில் திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த திருமதி.முத்தமிழ் செல்வி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலைப் பெற்று, மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கார்த்திக் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலையம் வந்து மேற்படி புகார் வாக்குமூலத்தின்படி நிலையக் குற்ற எண்.680/2016, இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324 மற்றும் 307-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு கோப்பினை விசாரணைக்காக ஆய்வாளர் திரு.முருகனின் பார்வைக்கு வைத்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2**. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**.

இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஆய்வாளர் திரு.முருகன் 01.11.2016ம்தேதி இரவு 9.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஸ்ரீநிவாசன் மற்றும் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5**. பின்னர் இரவு 10.00 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்த இரத்தம்பட்ட சிமெண்ட் காரை மற்றும் இரத்தம்படாத சிமெண்ட் காரை சிறிதளவை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.6**. பின்னர்

புகார்தாரர் கார்த்திக் மற்றும் சாட்சி லட்சுமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் 02.11.2016ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் திண்டுக்கல், பைபாஸ்ரோடு, வத்தக்குண்டு மேம்பால ரோடு அருகே வைத்து எதிரிகள் பாலமுருகன் மற்றும் கோபிநாத் ஆகியோரை கைது செய்து விசாரித்தபோது எதிரி பாலமுருகன் மற்றும் கோபிநாத் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஸ்ரீநிவாசன் மற்றும் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி எதிரி பாலமுருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு தான் பயன்படுத்திய பட்டாக்கத்தியை பைபாஸ் ரோட்டில் உள்ள சர்வீஸ் ரோட்டிற்கு கிழக்கு பக்கமாக உள்ள செடிப்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும், எதிரி கோபிநாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு தான் பயன்படுத்திய கத்தியை முத்தழகுபட்டி பிரிவு பக்கமாக உள்ள செடிப்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும் கூறியதன்பேரில், மேற்படி எதிரிகள், மேற்படி சாட்சிகளுடன் மேற்படி இடத்திற்கு சென்று எதிரி பாலமுருகன் எடுத்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட பட்டாக்கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேலும் எதிரி கோபிநாத் எடுத்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி எதிரி பாலமுருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான, " பைபாஸ் ரோடு போய் சர்வீஸ் ரோடு கிழக்கு பக்கமாக இருந்த செடிப்புதரில் நான் பட்டாக் கத்தியை மறைத்து வைத்துவிட்டேன்" அது **அ.சா.ஆ.7**. எதிரி கோபிநாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்

அனுமதிக்கப்பட்ட பகுதியான "முத்தழகுபட்டி பிரிவு பக்கமாக போனபோது அங்கிருந்த செடிப்புதரில் நான் வைத்திருந்த கத்தியை மறைத்து வைத்துவிட்டான்" அது **அ.சா.ஆ.8.** எதிரி பாலமுருகனிடம் இருந்து பட்டாக்கத்தி கைப்பற்றப்பட்ட அத்தாட்சி **அ.சா.ஆ.9**. எதிரி கோபிநாத்திடம் இருந்து கத்தி கைப்பற்றப்பட்ட அத்தாட்சி **அ.சா.ஆ.10**.

பின்னர் 02.11.2016ம் தேதி காலை 11.30மணியளவில் தோமையார்புரம் மேடு அருகே வைத்து எதிரிகள் அருள்பாண்டி மற்றும் சூரியா ஆகியோரை கைது செய்து விசாரித்தபோது எதிரி சூரியா தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஸ்ரீநிவாசன் மற்றும் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்கமூலத்தில் எதிரி சூரியா சம்பவத்தில் பயன்படுத்திய மரக்கம்பை பெரிய ஆண்டவர் கோவில் வடக்கு பக்கமாக சீமை கருவேல செடிப்புதரில் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன்பேரில், மேற்படி எதிரிகள், மேற்படி சாட்சிகளுடன் மேற்படி இடத்திற்கு சென்று எதிரி சூரியா எடுத்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட மரக்கம்பை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேற்படி எதிரி சூரிய கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான, " பெரியாண்டவர் கோவில் வடக்கு பக்கமாக சீமை கருவேல செடிப்புதரில் நான் வைத்திருந்த கம்பை மறைத்து வைத்துவிட்டேன்" **அ.சா.ஆ.11**. மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.12**.

பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவிட்டு, சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட இரத்தம்பட்ட மற்றும் இரத்தம்படாத சிமெண்ட் காரை மற்றும் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை படிவம் – 95ன் மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்.

இரத்தம்பட்ட மற்றும் இரத்தம்படாத சிமெண்ட் காரை சம்மந்தப்பட்ட படிவம் – 95 **அ.சா.ஆ.13**. எதிரி பாலமுருகனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பட்டாக்கத்தி சம்மந்தப்பட்ட படிவம் – 95 **அ.சா.ஆ.14**. எதிரி கோபிநாத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்தி சம்மந்தப்பட்ட படிவம் – 95 **அ.சா.ஆ.15**. எதிரி சூரியாவிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மரக்கம்பு சம்மந்தப்பட்ட படிவம் – 95 **அ.சா.ஆ.16**. பட்டாக்கத்தி **சா.பொ.1**. கத்தி **சா.பொ.2**. மரக்கம்பு **சா.பொ.3**.

பின்னர் சாட்சிகள் ஸ்ரீநிவாசன், மாரிமுத்து, ஜமுனா மற்றும் செல்லம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் கைப்பற்றப்பட்ட இரத்தம்படிந்த மற்றும் இரத்தம்படியாத சிமெண்ட் காரையை பகுப்பாய்விற்காக நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்க உத்தரவு பெற்று, திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.சுரேஷ் என்பவர் மூலமாக பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ.17**.

பின்னர் பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர் திரு.விஜேந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.18**. பின்னர் காயம்பட்ட கார்த்திக்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.ஆராதனா மற்றும் மேல்சிகிச்சை அளித்த மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திரு.நிப்பான் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, கார்த்திக்கின் விபத்து பதிவேட்டில் காயத்தின் தன்னை பற்றி சான்று பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.19**.

பின்னர் முதல்நிலை காவலர் திரு.சுரேஷ் மற்றும் சார்பு ஆய்வாளர் திருமதி.முத்தமிழ் செல்வி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் பாலமுருகன், கோபிநாத், சூரியா, அருள்பாண்டி ஆகியோர் மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 307–ன் படியும், எதிரி கப்பர் ராஜா மீது இ.த.ச பிரிவு 307 உ/இ 34–ன் படியும் 11.12.2017ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், தவறாக கொடுக்கப்பட்ட புகாரைப் பெற்று முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றும், எதிரிகள் எவ்வித ஒப்புதல் வாக்கமூலமும் கொடுக்கவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

Signature of the deponent

Taken down by me/before me in open court on 15.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.15 18:19:56 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**